# உபண்டு 9.10 வெளியீட்டு விழா

கடந்த ஞாயிற்று கிழமை (29.11.09) அன்று காஞ்சிபுரம் P.T.V.S (ஆங்கில வழி) பள்ளியில் உபண்டு 9.10 வெளியீட்டு விழா காஞ்சி லினக்ஸ் பயனர் குழுமம் மூலாமாக சிறப்பாக நடந்தேரியது.

இவ்விழாவில் மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் சென்னை லினக்ஸ் குழுமத்தை சார்ந்த சிலர் என 55 பேர் கலந்துகொண்டு இவ்விழாவை சிறப்பித்தனர்.

இவ்விழாவின் சிற்பபுவிருந்தினராக சென்னை லினக்ஸ் பயனர் குழுமத்தை சார்ந்த திரு. தியாகராஜன் அவர்கள் பங்கேற்றார்.

முதலாவதாக திரு.செல்வமணி இவ்விழா பற்றியும், இவ்விழாவின் சிறப்பு பற்றியும் வரவேற்புரையாற்றினார்.

பின்னர் கட்டற்ற மென்பொருள் என்றால் என்ன? அதன் பயன்பாடுகள் மற்றும் அதில் உள்ள சிற்பபம்சங்களை பற்றி திரு. லோகேஷ்பிரபு எடுத்துரைத்தார்.

அடுத்து திரு. இராஜ்குமார் உபண்டு-வில் உள்ள வரைகலை(compiz) பற்றிய ஒரு சில காட்சித்தொகுப்புகளும் மற்றும் உபண்டு 9.10-ல் உள்ள மென்பொருள் பற்றிய தகவல்களை அளித்தார்.

பின்பு உபண்டு 9.10-யை எப்படி கணினியில் நிறுவுவது என்பதை திரு.தஸ்தாகீர் நேரடியாக செய்து காண்பித்தார்.

இதன் இடையே உபண்டு உருவான விதம், உபண்டு என்ற பெயரின் சிறப்பையும் அதன் வரலாற்றை பற்றியும் திரு.பாலகிருஷ்ணன் உரையாற்றினார்.

கட்டற்ற மென்பொருளில் தங்களது ஈடுபாட்டை எப்படி அதிகரித்துகொள்வது மற்றும் இந்த மென்பொருள்களை பயன்படுத்துகையில் ஏற்படும் சந்தேகங்களை யாரிடம் கேட்பது என்கிற குழப்பங்களை தீர்க்கும் வகையில்

பயனர் குழுமம்(LUG),
மின்னஞ்சல் தகவல்கள்(Mailing lists) மற்றும்
இணையதளங்கள்(Forums)

பற்றிய தகவல்களை திரு.பிரவீன் மக்களுக்கு தெளிவாக எடுத்துரைத்தார்.

இவ்விழாவின் சிறப்பு விருந்தினரான திரு. தியாகராஜன் அவர்கள் உபண்டு 9.10 குருந்தகட்டினை வெளியிட மாணவர் ஒருவர் பெற்றுக்கொண்டார்.

மேலும் அவரது சிறப்புரையாக நட்சத்திரங்கள் மற்றும் கோள்களை பற்றி அறிய உதவும் stellarium என்ற மென்பொருளின் பயன்பாட்டையும், பயன்படுத்தும் முறை பற்றியும் எடுத்துரைத்தார். மேலும் கட்டற்ற மென்பொருளில் உள்ள வேலைவாய்ப்பு பற்றி தகவல்களையும் அளித்தார்.

சென்னை லினக்ஸ் பயனர் குழுமத்தை சேர்ந்த திரு. சீனிவாசன் அவர்கள் மக்களின் சந்தேகங்களுக்கு விரிவாகவும், தெளிவாகவும் பதிலளித்தார்.

இவ்விழாவின் இறுதியாக உபண்டு 9.10 குறுந்தகடு விற்பனை செய்யப்பட்டது.

-காஞ்சி லினக்ஸ் பயனர் குழுமம்.